# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## அசல் வழக்கு எண். 139/2015

சாட்சி : PW– 1
பெயர் : திரு. ரமேஷ் தேதி : 12.02.2025

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி**:– (1ம் பிரதிவாதி தரப்பில்)

வா.சா.ஆ.–2 ஆவணத்தை படித்து பார்த்துள்ளேன். 1985ம் வருடத்தில் என் தந்தை இறந்துவிட்டார். என் தந்தை இறந்தபிறகு என் தாயார்தான் எங்களுக்கு காப்பாளராக இருந்தார். 09.02.1987ம் தேதியில் என் தாயார் அவர் சார்பாகவும், இளவர்களுக்காகவும் சேர்ந்து தாவா சொத்தை கிரயம் செய்துகொடுத்துள்ளார். அந்த விவரம் எனக்கு 2015ம் வருடத்தில்தான் தெரியும். நாங்கள் இளவர்களாக இருந்தபொழுது 1ம் பிரதிவாதி மாதேஸ்வரன் எங்கள் வீட்டிற்கு வந்து என் தாயாரிடம் அடிக்கடி சண்டை செய்து வந்தார். எதற்காக சண்டை போட்டார் என்று எனக்கு தெரியாது. ஆனால் அடிக்கடி 1ம் பிரதிவாதி ஆனவர் என் தந்தை இறந்தபிறகு என் தாயாரிடம் சண்டை செய்து வந்தார்.

நான் சொன்ன தகவலின் அடிப்படையில் வழக்குரை தயார் செய்யப்பட்டது. 1ம் பிரதிவாதி ஆனவர் வீட்டிற்கு அடிக்கடி வந்து என் தாயாரிடம் சண்டை செய்து வந்தது பற்றி வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. என் முதல்விசாரணையில் என் தாயாருடன் 1ம் பிரதிவாதி சண்டை செய்த விவரம் பற்றி சொல்லவில்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. முதன்முதலாக உண்மைக்கு புறம்பாக இன்றுதான் என் தாயாருடன் முதல் பிரதிவாதி சண்டை செய்தது பற்றி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

வா.சா.ஆ.–2 ஆவணம் செல்லாது என இந்த வழக்கில் பரிகாரம் கேட்டுள்ளேன். வா.சா.ஆ.–1 ஆவணத்தில் கிரய தொகை ரூ.72,500/– என

குறிப்பிடப்பட்டுள்ளது. நான் மேஜர் ஆனதிலிருந்து 3 வருடங்களுக்குள் பத்திரத்தை ரத்து செய்ய வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்று சொன்னால் அந்த ஆவணம் பற்றி எனக்கு தகவல் தெரிந்த பிறகு அந்த தேதியிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் வழக்கு தாக்கல் செய்ய முடியும். நானும் என் சகோதரர்களும் மேஜர் ஆன பிறகு 3 ஆண்டுகளுக்குள் வழக்கு தாக்கல் செய்யாததால் தற்பொழுது அந்த ஆவணத்தை ரத்து செய்ய பரிகாரம் கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல.

வா.சா.ஆ.– 2 ஆவணத்தை நானும் என் சகோதரர்களும் தரப்பினர்களாக உள்ளதால் அந்த பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வழக்கறிஞர் சொன்னதன் அடிப்படையில் நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளேன். வா.சா.ஆ.–2 ஆவணத்தை ரத்து செய்ய அதன் மதிப்பு ரூ.1,000/– என கணக்கிட்டுள்ளதால் அந்த பரிகாரம் கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல.

வா.சா.ஆ.–3 பாக பத்திர ஆவணம் எழுதப்பட்ட பொழுது என் தாயார் உயிருடன் இருந்தார். 23.08.2008 ம் தேதி பாக பத்திரம் எழுதப்பட்டது. வில்லங்க சான்றிதழ் வாங்கி பார்த்த பிறகுதான் 23.08.2008 தேதியில் பாக பத்திரம் எழுதப்பட்டது. வில்லங்க சான்றில் எந்த வில்லங்கமும் இல்லை. 2008 ம் வருடத்தில் வில்லங்க சான்றிதழ் வாங்கினோம். 2008 ம் வருடம் வாங்கிய வில்லங்க சான்றில் எந்த வில்லங்கமும் இல்லை. 2008 ம் வருடத்தில் வாங்கிய வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன். நான் தெரிந்தே 2008 ம் வருடத்தில் வாங்கிய வில்லங்க சான்றை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தாயார் சொத்தை விற்ற விவரத்தை என்னிடம் சொல்லியுள்ளார் என்றும், நாங்கள் அந்த விவரத்தை மறைத்து பாக பத்திரம் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

தாவா சொத்துதான் 1 ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள சொத்தாகும். சொத்தின் மொத்த விஸ்தீரணம் 5000 சதுர அடிகள் ஆகும். திருத்தப்பட்ட வழக்குரையில் தாவா சொத்து விவரத்தில் 8000 சதுர அடிகள் என

சொல்லியுள்ளேன். அது தட்டச்சு பிழை ஆகும். முதலில் தாக்கல் செய்த வழக்குரையில் 800 சதுர அடிகள் என்றுதான் சொல்லியுள்ளேன். நாங்கள் வாங்கிய வில்லங்க சான்றில் வா.சா.ஆ.–2 ஆவணம் பற்றி குறிப்பிடப்படவில்லை. தற்பொழுது என்னிடம் காட்டப்படும் வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ.–2 ஆவணம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் 01.06.2015 தேதிய வில்லங்க சான்றிதழ் – **பி.வா.சா.ஆ.–1** ஆகும். பி.வா.சா.ஆ.–1 ஆவணத்தில் 01.01.1987 முதல் 31.05.2015 தேதி வரையான காலத்திற்குண்டானது ஆகும். அந்த பதிவு தவறானதாக கூட இருக்கும்.

வா.சா.ஆ.–2 ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் ஆகும். வா.சா.ஆ.–2 ஆவணத்தின் நகலை 2015 ம் வருடத்தில் பதிவாளர் அலுவலகத்தில் இருந்துதான் பெற்றோம். சுரேஷ், பாலாஜி ஆகியோர் சொத்தை விற்பதற்காக முயற்சி செய்ததால் சார்பதிவாளர் அலுவலகத்தில் மனு கொடுத்தேன். நான் 09.06.2022 தேதியில் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் மனு கொடுத்தேன். நான் கொடுத்த அந்த மனுவின் புகைப்பட நகல் **பி.வா.சா.ஆ.–2** ஆகும். மேலும் சுரேஷ், பாலாஜி ஆகியோர் சொத்தை விற்க முயற்சி செய்ததால் எனக்கு பாதிப்பு ஏற்பட்டதால் 28.03.2008 ம் தேதி பாக பத்திரத்தை ரத்து செய்வதற்காக மனு கொடுத்தேன். நான் கொடுத்த மனுவின்பேரில் மாவட்ட பதிவாளர் உத்தரவு பிறப்பித்தார். என்னிடம் காட்டப்படுவதுதான் அந்த உத்தரவு ஆகும். 18.07.2022 தேதிய மாவட்ட பதிவாளர் அவர்களின் உத்தரவு – **பி.வா.சா.ஆ–3** ஆகும்

மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் நான் கொடுத்த மனுவில் 09.02.1987 தேதிய கிரய பத்திரம் செல்லும் என்றும், அதனால் அதில் குறிப்பிட்டுள்ள சொத்தை சேர்த்து 28.03.2008 தேதிய பாகபத்திரத்தில் பத்திரம் செய்துள்ளதால் அந்த பாகபத்திரத்தை ரத்து செய்ய மனு கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. என் தந்தை வாங்கிய சொத்து என்பதாலும், நாங்கள் சுவாதீனத்தில் இருந்து வருவதாலும் அதனடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி கிரயம் பெற்ற தேதியிலிருந்து 1ம் பிரதிவாதிதான் சொத்தை அனுபவித்து வருகிறார்

என்றும், முதல் பிரதிவாதி பெயரில் பட்டா உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. நானும் என் சகோதரர்களும் தாவா சொத்தை எந்த காலத்திலும் அனுபவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்காது என்று சொன்னால் சரியல்ல. நான் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அ.வ.எண். 424/2015 என்ற வழக்கு இந்த நீதிமன்றத்தில் மாறுதல் செய்யப்பட்டு அ.வ.எண். 5/2017 என புதிய எண் கொடுக்கப்பட்டுள்ளது. என்னுடைய சுவாதீனத்தை தொந்தரவு செய்யக்கூடாது என்பதற்காக அ.வ.எண். 424/2015 என்ற வழக்கை தாக்கல் செய்தேன். அ.வ.எண். 5/2017 தாவாவில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், சுவாதீனத்திலும் இல்லை என்ற காரணத்தினாலும், அ.வ.எண். 139/2015 என்ற தாவாவை விளம்புகை பரிகாரத்திற்காக தாக்கல் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல.

தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு முழுமையாக பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதனால் நான் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்கமுடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் அ.வ.எண். 424/2015 என்ற வழக்கை பொய்யான சங்கதிகள் கூறி தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அ.வ.எண். 424/2015 என்ற வழக்கை பொய்யான சங்கதிகள் கூறி தாக்கல் செய்ததால்தான் அதன் பிராது நகலை 1ம் பிரதிவாதி பெற்ற பிறகுதான் நாங்கள் 28.03.2008ம் தேதி 1ம் பிரதிவாதியின் சொத்தையும் சேர்த்து ஒரு பாக பத்திரம் உருவாக்கிய விவரம் தெரிய வந்தது என்று சொன்னால் சரியல்ல. பொய்யான பாக பத்திரத்தின் அடிப்படையில் பட்டாவை என் பெயரில் மாற்றியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் முதல் பிரதிவாதி அ.வ.எண். 6/2017 என்ற தாவாவை 28.03.2008ம் தேதி பாக பத்திரத்தை செல்லாது என கூறியும், அந்த பத்திரம் வாதியை கட்டுப்படுத்தாது என்று கூறியும், அந்த பாக பத்திரத்தின் அடிப்படையில் தாவா சொத்தின் பட்டாவை ரமேஷ், பாலாஜி, சுரேஷ் ஆகியோர்கள் பெயரில் மாற்றியது செல்லாது எனக் கோரி பரிகாரங்கள்

கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து 1ம் பிரதிவாதி அனுபவத்தில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கேட்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள அ.வ.எண். 6/2017 வழக்கு தாவாபடி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. அ.வ.எண்கள். 139/2015 மற்றும் 5/2017 வழக்குகள் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

Sd./- N. Ramakrishnan
I Additional District Judge,
Salem.